# மஸ்ஜித்களில் கடமையாற்றும் முஅத்தின்களின் வாழ்வாதார நிலை: ஏறாவூர் பிரதேசத்தை மையப்படுத்திய ஒரு கள ஆய்வு

ML. Mohamed Helfan[1] & SMM. Mazahir[2]

[1] Urban Council Eravur
[2] Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka
mlhelfan@gmail.com, mazahirsmm@seu.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

ஒரு மனிதனின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் திருப்தியான தொழில் பிரதான இடத்தைப் பெற்றுள்ளது. ஏறாவூர் பிரதேசத்தில் காணப்படுகின்ற மஸ்ஜித்களில் கடமையாற்றும் முஅத்தின்களின் வாழ்வாதார நிலையையும் தொழில் திருப்தியையும் மதிப்பிடுதல் இவ் ஆய்வின் பிரதான நோக்கமாகும். பண்பு ரீதியில் அமைந்த இவ்வாய்வு 30 முஅத்தின்களிடம் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் அறிக்கைகளும் இதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஏறாவூர் மஸ்ஜிதுகளில் கடமையாற்றும் முஅத்தின்களில் அதிகமானவர்கள் வயோதிபர்களாகவும், கல்வித் தகைமை குறைந்தவர்களாகவும் ஏதோ ஓர் அமைப்பில் அல்குர்ஆனுடன் தொடர்புடையவர்கள்களாகவும் காணப்படுகிறார்கள். அவர்களுள் அதிகமானவர்கள் மஸ்ஜிதுக்காக அதிக நேரத்தை செலவிடுபவர்களாகவும், ஒப்பிட்டு ரீதியில் சேவைக் காலம் கூடியவர்களாகவும் இருப்பதோடு விடுமுறை இன்றியே அவர்கள் கடமையாற்றுகிறார்கள். இம்மஸ்ஜிதுகளில் கடமையாற்றுபவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த சம்பளம் இலங்கையின் தனி நபர் வருமான மட்டத்தை அடையவில்லை என்பதோடு, தொழில் திருப்தி இன்றி இறை திருப்திக்காக வேலை செய்பவர்கள் அவர்களுள் அதிகமானவர்களாவர். தௌஹீத் அமைப்பு சார்ந்த பள்ளிவாயில்களில் மாத்திரம் முஅத்தினாருக்குரிய தங்கும் வசதிகள் மற்றும் அறையின் உள்ளார்ந்த வசதிகள் செய்யப்பட்டுள்ளதை கண்டு கொள்ள முடிந்தது. சம்பளம் குறைவினால் அவர்களது பெண் பிள்ளைகளின் திருமண வயதும் அதிகரித்திருப்பதோடு, வீடு இன்மையால் விவாகரத்தும் இடம்பெற்றுள்ளது. எனவே, முஅத்தின்மார்களின் சம்பளத்தை அதிகரித்து, அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான முன்னெடுப்புக்கள், அதற்கான வழிகாட்டல்கள் பற்றிய முன்மொழிவுகளைத் தருவதாகவும், எதிர்காலத்தில் இவ்விடயத்தில் ஆய்வை மேற்கொள்வோருக்கு உதவுவதாகவும் இவ்வாய்வு அமைகிறது.

**திறவுச் சொற்கள்:** மஸ்ஜித்கள், முஅத்தின்கள், வாழ்வாதார நிலை, தொழில் திருப்தி

## ஆய்வுப் பின்னணி:

பூமியில் இறை இல்லங்களாக மஸ்ஜித்கள் விளங்குகின்றன. மஸ்ஜித்களைப் பராமரிப்பவர்கள் எத்தகைய தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை திருக்குர்ஆன் பின்வருமாறு விபரிக்கின்றது. "**அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பிக்கை கொண்டு, தொழுகையை நிலைநாட்டி, ஸகாத்தையும் கொடுத்து, அல்லாஹ்வைத் தவிர வேறு எவரையும் அஞ்சாதோரே அல்லாஹ்வின் மஸ்ஜிதுகளைப் பராமரிக்கத் தகுதியுடையோராவர். எனவே, இவர்கள் நேர்வழி பெற்றோர்களில் உள்ளவர்களாவர்.**" (அல்குர்ஆன், 09:18) இஸ்லாமிய வரலாற்றில் அமைக்கப்பட்ட பல பள்ளிவாசல்கள் மேற்படி அல்குர்ஆன் குறிப்பிடும் தகுதிகளைப் பெற்ற வர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்தன. பொறுப்புக்கள் அவர்கள் மத்தியில் பகிரப்பட்டு செவ்வனே நிறைவேற்றப்பட்டன. இதனால் மஸ்ஜிதின் ஊடாக எதிர்பார்க்கப்படும் பணிகள் நிறைவேற்றப்பட்டு, அவை இஸ்லாமிய சமுதாய எழுச்சிக்கு வித்திட்டன. இஸ்லாமிய வரலாற்றில் காணப்பட்ட மஸ்ஜிதுகள் கல்விக் கூடங்களாகவும், வைத்திய நிலையங்களாகவும், நீதிமன்றங்களாகவும், ஆலோசனை நிலையங்களாகவும்,

வெளிநாட்டுத் தூதரகங்களாகவும் ஒரே குடையின் கீழ் இயங்கி சமுகத்திற்கு வழிகாட்டியது. (மஸாஹிர் மற்றும் இஸ்மியா பேகம், 2014, ப.36)

ஆனால் இன்று பள்ளிவாயில்களைப் பராமரிப்போர் அல்குர்ஆன் குறிப்பிடும் தகைமைகளைப் பெற்றவர்களாக இருக்கின்றார்களா என்பதிலும் மேற்படி பணிகள் சரியாக இடம்பெறுகின்றதா என்பதிலும் சந்தேகம் நிலவுகின்றது. இன்று பள்ளிவாயில்களுக்குரிய நம்பிக்கையாளர் சபை உருவாக்கப்பட்டு அங்கத்தவர்கள் உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட போதிலும் அவர்களின் பணி பூரணத்துவமிக்கதாக உள்ளதா என்பதை மதிப்பிட வேண்டியுள்ளது.

இவ்வாறான நிலையில் மஸ்ஜிதுகளின் நம்பிக்கையாளர்கள் சபையினால் மஸ்ஜிதுகளைப் பராமரிப்பதற்காக முஅத்தின்கள் நியமிக்கப்பட்டு, மாதாந்த சம்பளம் வழங்கப்பட்டு, பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதான், இகாமத் கூறுதல் அவர்களது பிரதான பணிகளாக இருப்பதோடு பள்ளிவாயில்களைத் துப்பரவு செய்தல், ஜனாஸா கடமைகளை மேற்கொள்ளல் போன்றவையும் அவர்களால் நிறைவேற்றப்படுகின்றன. இலங்கை முழுவதிலும் இவ்வமைப்பிலேயே மஸ்ஜிதுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

உலகில் முஸ்லிம்கள் எங்கு வாழ்ந்தாலும் அங்கு மஸ்ஜிதுகள் அமைக்கப்பட்டு இறை வணக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை பெரிதாகவும் சிறிதாகவும் அமைந்த போதிலும் மஸ்ஜித் என்ற பெயரிலேயே அழைக்கப்பட்டு வருகின்றன. மஸ்ஜிதுகளை அமைத்துக் கொடுத்து நன்மைகளை பெற்றுக் கொள்வதில் இஸ்லாமிய நிறுவனங்கள் பெரிதும் பங்காற்றி வருகின்றன.

இலங்கையில், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட ஜூம்ஆ மஸ்ஜிதுகள், மஸ்ஜிதுகள், தைக்கியாக்கள், ஸாவியாக்கள் என சுமார் 2321 காணப்படுகின்றன. (முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்) இவற்றில் பதிவு செய்யப்பட்ட அதிகூடிய மஸ்ஜிதுகளைக் கொண்ட மாவட்டமாக கண்டி மாவட்டமும் (275) அதிகுறைந்த மஸ்ஜிதுகளைக் கொண்ட மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டமும் (06) காணப்படுகின்றன.

இந்த அடிப்படையில் ஏறாவூரில் 51 மஸ்ஜிதுகள் (ஏறாவூர் பள்ளிவாயில்கள், முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம், 2019) காணப்பட்ட போதிலும் அவைகளில் 8 ஜூம்ஆ மஸ்ஜிதுகள், 23 மஸ்ஜிதுகள், 3 தைக்கியாக்கள், 1 ஸாவியா என மொத்தம் 35 மஸ்ஜிதுகள் மாத்திரமே முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இவ்வாறு பதிவு செய்யப்பட்ட 30 பள்ளிவாசல்களில் பணியாற்றும் முஅத்தின்களின் வாழ்வாதார நிலையையும் அவர்களின் தொழில் திருப்தியையும் மதிப்பிடுவதாக இவ்வாய்வு அமைகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

மஸ்ஜிதுகளின் ஊடாகக் கிடைக்கப் பெறும் மாதாந்த வருமானம் போதாமையானது முஅத்தின்களின் வாழ்கையில் தொழில் திருப்தியின்மையையும், வாழ்வாதார சிக்கல்களையும் ஏற்படுத்தியுள்ளது.

**ஆய்வின் நோக்கம்**


ஏறாவூர் மஸ்ஜிதுகளில் கடமையாற்றும் முஅத்தின்களின் வாழ்வாதார நிலையையும் தொழில் திருப்தியையும் மதிப்பிடுதல்

**ஆய்வு முறையியல்**

பண்பு ரீதியான முறையில் அமைந்த இவ்வாய்வு முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தியதாகும். ஏறாவூர் பிரதேசத்தில் காணப்படுகின்ற 30 மஸ்ஜித் முஅத்தின்களிடம் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டு, அவற்றின் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. ஆய்வுக்கான கோட்பாட்டு அமைப்புத் திட்டத்தை நிறுவுவதற்காக வேண்டி இரண்டாம் நிலைத்தரவுகளான புத்தகங்கள், ஆய்வுக்கட்டுரைகள், அறிக்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கிடைக்கப் பெற்ற தகவல்கள் coding முறையினைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டு, விரிதாள் (Excel Sheet) மூலம் விளக்கங்களும் வரைபடங்களும் தயார்படுத்தப்பட்டுள்ளன.


**கலந்துரையாடலும், பிரதான கண்டறிதல்களும்**

மஸ்ஜித்களில் இளைஞர்கள் முதல் முதியவர்கள் வரை முஅத்தின்களாகக் கடமையாற்றிய போதிலும் ஒப்பீட்டு ரீதியில் வயதை நோக்கும் போது இளைஞர்களை விட முதியவர்களே அதிகமாக உள்ளமை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக 30 மஸ்ஜிதுகளில் கடமையாற்றும் முஅத்தின்களில் 66 வயது தொடக்கம் 75 வயதிற்குட்பட்டவர்களின் வீதமே அதிகமாகும். அதற்கு அடுத்த நிலையில் 56 - 65 வயதுடையவர்கள் காணப்படுகிறார்கள். இருந்த போதிலும் 76 வயது தொடக்கம் 85 வயதுகளை உடைய வயோதிபர்களின் சேவையையும் மஸ்ஜிதுகள் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அத்தோடு 25 – 35 வயது இடைவெளிக்குள் ஆகக் குறைந்தளவிலான (2.6%) முஅத்தின்களே பணியாற்றுவதோடு, 25வயதுக்குக் குறைந்தவர்கள் முஅத்தின்களாக இல்லாதிருப்பதும் இங்கு அவதானிக்கத்தக்கது. இது முஅத்தின்களாகத் தொழிலாற்றுவது இளைஞர்களை ஈர்ப்பதாக அமையவில்லை என்பதைக் காட்டுகின்றது. இதனை பின்வரும் வட்டவரைபு எடுத்துக் காண்பிக்கின்றது.




வரைபடம் - 01 – வயதடிப்படையில் முஅத்தின்கள்

மஸ்ஜித்களில் பணிபுரியும் முஅத்தின்களின் கல்வித்தகைமையைப் பொறுத்தமட்டில் பல தரங்களை உடையவர்களாக அவர்கள் காணப்படுகிறார்கள். குறிப்பாக தரம் ஐந்து வரை கல்வி கற்றவர்கள் 50% வீதமானவர்கள் காணப்படுகின்றனர். வீதத்தின் அடிப்படையில் இவர்களே அதிகமாகும். இன்னும் 20% வீதமானவர்கள் 6 – 10 வரையான கல்வியையும், 13.33% வீதமானவர்கள் க.பொ.த. (உ/த)க் கல்வியையும், 3.33% வீதமானவர் க.பொ.த. (சா/த)க் கல்வியைப் பூர்த்தி செய்தவராகவும் காணப்படும் அதேவேளை 10% வீதமானவர்கள் பாடசாலைக் கல்வியைப் பெறாதவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களுள் மத்ரஸாவில் பட்டம் பெற்ற ஒருவரும், அல்குர்ஆனை முழுமையாக ஓதியவர்கள் 06 பேரும், த.ஃலீம் குர்ஆன், ஐந்து ஜுஸ்உக்களை ஓதியவர்கள் முறையே 10, 13 என முஅத்தின்களாகப் பணி புரிகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதனை பின்வரும் வரைபடம் மூலம் அறியலாம்.





வரைபடம் 02 – முஅத்தின்களின் கல்வித் தகைமைகள்

முஅத்தின்களின் வீட்டு வசதிகள் தொடர்பாக நேர்காணல் செய்யப்பட்ட போது 70% வீதமானவர்கள் சொந்த வீட்டில் வசித்து வருவதோடு 30% வீதமானவர்கள் வாடகை வீட்டில் வசித்து வருகின்றனர். இருந்தபோதிலும் (12) 40% வீதமான முஅத்தின்களுக்கு திருமணம் செய்யாத பெண் பிள்ளைகள் (15) காணப்படுகின்றனர். மேலும் (6) 20% வீதமான முஅத்தின்களுக்கு திருமண வயதை எட்டிய (18வயது – 40வயது) பெண் பிள்ளைகள் (08) வீட்டு வசதியின்றி காணப்படுகின்றனர். அவற்றிலும் 2 முஅத்தின்களின் 2 பெண் பிள்ளைகளுக்கு வீடு இன்றி திருமணம் செய்து வைத்த போதிலும் குறித்த காலப் பகுதியில் வீட்டை கட்டிக் கொடுக்க முஅத்தினால் முடியாமல் போனதால் அப்பிள்ளைகள் இருவரையும் அவர்களது கணவர்கள் வீட்டுக்காக விவாகரத்து செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும். இதனைப் பின்வரும் அட்டவணை மூலம் அறியலாம்.

| முஅத்தின்களின் எண்ணிக்கை | வீட்டு வசதி | | திருமணமாகாத பெண் பிள்ளைகள் | வயது வந்த, திருமணமாகாத பெண் பிள்ளைகள் | விவாகரத்துப் பெற்ற பெண் பிள்ளைகள் |
|---|---|---|---|---|---|
| | சொந்த வீடு | வாடகை வீடு | | | |
| 30 | 21 (70%) | 09 (30)% | 15 | 8 | 2 |


அட்டவணை 1 - ஏறாவூர் மஸ்ஜிதுகளில் கடமையாற்றும் முஅத்தின்களின் வீட்டு வசதிகள்

மஸ்ஜித்களில் கடமை புரியும் முஅத்தின்களுக்கு எழுத்து மூலமான கடமைப்பட்டியலோ, எண்ணிக்கை வகுக்கப்பட்ட வேலை மணித்தியாலங்களோ வரையறுத்துக் கொடுக்கப்படவில்லை. இருந்த போதிலும் ஐங்காலத் தொழுகைகளுக்கு நேரம் கொடுப்பதோடு, அதனை தவிர அதிகமான நேரங்கள் மஸ்ஜிதுக்காக வழங்கப்படுவதை ஆய்வுப் பிரதேசத்தில் காணமுடிகிறது. நாள் ஒன்றுக்கு 8 மணித்தியாலங்கள் மஸ்ஜிதுக்காக வழங்கும் முஅத்தின்கள் 11 பேர் காணப்படுவதோடு, 12 மற்றும் 24 மணித்தியாலங்களும் மஸ்ஜிதுக்காக நேரம் வழங்கும் முஅத்தின்களும் இருப்பதைக் காண முடிகிறது. இதனைப் பின்வரும் வரைபடம் எடுத்துக் காட்டுகின்றது.




வரைபடம் 03 - ஏறாவூர் மஸ்ஜிதுகளில் கடமையாற்றும் முஅத்தின்களின் வேலை மணித்தியாலங்கள்


முஅத்தின்களின் சேவைக் காலத்தைப் பொறுத்தமட்டில் மூன்று வருடங்களாகப் பணிபுரிவோர் 10 பேர் உள்ளனர். 4 - 6, 7 – 9 வருடங்கள் பணி புரிவோர் முறையே 9, 6 என அடையாளப்படுத்த முடியும். பத்து வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக் காலத்தைக் கொண்ட ஐவர்களில் ஒருவர் 10 வருடத்தையும் இருவர் 13 வருடங்களையும் ஒருவர் 14 வருடத்தையும் அவர்களில் ஒருவர் 37 வருடமாகவும் சேவையாற்றி வருவது



குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதனைப் பின்வரும் வரைபடம் காண்பிக்கின்றது.


வரைபடம் 04 - ஏறாவூர் மஸ்ஜிதுகளில் கடமையாற்றும் முஅத்தின்களின் சேவைக் காலம்

முஅத்தின்களுக்குரிய விடுமுறையை நோக்கும் போது விடுமுறை இன்றி கடமையாற்றுபவர்களே அதிகமாக இருப்பதனை ஆய்வின் மூலம் கண்டறிய முடிந்தது. குறிப்பிட்ட 09 மஸ்ஜித்களில் மாத்திரம் கடமையாற்றும் முஅத்தின்களுக்கு மாத்திரம் முறையே 2, 3 நாட்கள் விடுமுறை வழங்கப்படுகின்றது. இருந்த போதிலும் விடுமுறை பெற்றுக் கொள்பவர், பதில் கடமை புரிய ஒருவரை நியமிக்கும் சந்தர்ப்பத்தில் மாத்திரமே விடுமுறை பெற்றுக் கொள்ளும் நிலையும் இங்கு காணப்படுகின்றது. இதனை கீழ்வரும் வரைபடம் எடுத்துக் காட்டுகின்றது.




வரைபடம் 05 - ஏறாவூர் மஸ்ஜிதுகளில் கடமையாற்றும் முஅத்தின்களின் விடுமுறை


முஅத்தின்களுக்குரிய வசதிகளைப் பொறுத்தமட்டில் உள்ளூரைச் சேர்ந்த முஅத்தின்களே (28) அதிகமாக உள்ளதால் பள்ளிவாயிலில் அவர்கள் தங்குவதற்கு என்று தனியான அறைகள் மற்றும் அறைக்குரிய வசதிகள் மிகவும் குறைவாகும். ஆனாலும் தௌஹீத் அமைப்பின் பெயர் பொறிக்கப்பட்ட பள்ளிவாயில்களில் முஅத்தினுக்குரிய தனியறை மற்றும் அதற்குரிய வசதிகள் காணப்படுவதை இவ்வாய்வு வெளிக்கொண்டு வருகின்றது. இதனைப் பின்வரும் வரைபடம் எடுத்துக் காட்டுகின்றது.




வரைபடம் 06 - ஏறாவூர் மஸ்ஜிதுகளில் கடமையாற்றும் முஅத்தின்களுக்கான அறைவசதிகள்

முஅத்தின்களின் மாதாந்த சம்பளத்தை நோக்குகையில் ஜும்ஆ மஸ்ஜிதுகளில் கடமையாற்றும் முஅத்தின்களுக்கு ஆகக் குறைந்த சம்பளமாக 8000 ரூபாவிலிருந்து ஆகக் கூடிய சம்பளமாக 29,500 ரூபா வழங்கப்படுகின்றது. ஜும்ஆ நடைபெறாத மஸ்ஜிதுகளில் கடமையாற்றுபவர்களுக்கு ரூபா 6,000 – 17,500 வரை வழங்கப்படுகிறது. ஜும்ஆ மஸ்ஜித், ஜும்ஆ நடைபெறாத மஸ்ஜிதுகளில் கடமையாற்றும் அதிகளவான முஅத்தின்கள் ரூபா 10,000 – 15,000 இற்கு இடைப்பட்ட சம்பளத்திலேயே வாழ்கிறார்கள். 37 வருடம் சேவைக் காலத்தைக் கொண்ட முஅத்தினும் ரூபா 23,000 ஐப் பெறுவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.


இத்தகைய குறைந்த சம்பளத்தை பெற்று வாழ்க்கையை நடாத்துவதில் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றார்கள். உணவு, உடை, பிரயாணம், மருத்துவம், வாடகை என தேவைகள் பல்கிக் கொண்டே செல்லுகையில் இவற்றை இச்சிறு சம்பளத்தின் ஊடாக ஈடு செய்ய முடியாத நிலையில் முஅத்தின்கள் இருப்பதை அவதானிக்க முடிந்தது. சம்பளம் குறைவாக இருந்த போதிலும் இறை திருப்திக்காக சேவை செய்கிறோம் என்ற பதில்களை அவர்கள் மூலம் அறிய முடிகிறது. இதனைப் பின்வரும் வரைபடம் மூலம் அறியலாம்.



வரைபடம் 07 - ஏறாவூர் மஸ்ஜிதுகளில் கடமையாற்றும் முஅத்தின்களின் மாதாந்த சம்பளம்

இலங்கையின் தனிநபர் வருமானம் 4102 (வினோத், 2019.05.24) அமெரிக்க டொலராகும். அவ்வாறாயின் இலங்கை மத்திய வங்கி அறிக்கை 2018இன் படி ஒரு தனி நபர் வருமானம் வருடத்திற்கு 666,817 ரூபா அடையப் பெறல் வேண்டும். அதன்படி மாதாந்தம் ஒருவரின் வருமானம் சராசரியாக 55,568 ரூபாவாக இருக்க வேண்டும். அப்போதுதான் அவருடைய வருமானம் போதுமானதாக இருக்கும். இவ்வாறு தனிநபர் வருமான சுட்டெண் இருக்கும் போது ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள மஸ்ஜிதுகளில் கடமையாற்றும் முஅத்தின்கள் எவரும் இத்தனிநபர் சுட்டென்னை அடையவில்லை என்பது புலப்படுகின்றது. மேலும் இதனடிப்படையில் அதிகளவான பெண் பிள்ளைகளைக் கொண்ட முஅத்தின்களின் நிலையும் கவலைகிடமானதே என்பதை இவ்வாய்வு புலப்படுத்துகின்றது.

முஅத்தின்களின் தொழில் திருப்தியை நோக்கும் போது அவர்களில் அதிகமானவர்கள் (73%) தொழில் திருப்தி இன்றி இறை திருப்திற்காக கடமையாற்றுவதை நேர்காணலின் போது அறிய முடிகிறது. அவர்கள் பெறும் சம்பளம் குடும்பத்தைக் கொண்டு நடாத்த போதாமையாகவும், வேறு வழியின்றி இத்தொழிலில் ஈடுபடுவதாகவும் அவர்களின் மனக் கவலை வெளிப்படுத்தப்படுகின்றது. இதனை பின்வரும் வரைபடம் தெளிவுபடுத்துகின்றது.




வரைபடம் 08 - ஏறாவூர் மஸ்ஜிதுகளில் கடமையாற்றும் முஅத்தின்களின் தொழில் திருப்தி - 1

மாதாந்த சம்பளத்தின் ஊடாக குடும்பத்தின் செலவுகளை சமாளிக்க முடியும் எனும் நிலைப்பாட்டை உடையர்கள் 6.66% வீதமானோர் காணப்படுகிறார்கள். இவர்கள் பெரும்பாலும் கணவன், மனைவி என தனித்தவர்கள். இவர்களுக்கு ஏனைய தேவைகள் மிகவும் குறைவாகும். ஆனால் 93.33% வீதமானோரின் நிலைப்பாடானது மாதாந்தம் பெறும் சம்பளம் வாழ்க்கைச் செலவுக்கு போதாமையாக உள்ளதோடு, பாடசாலை செலவுகள், வீடு நிர்மாணிப்புச் செலவுகள், மருத்துவச் செலவுகள் என செலவுகள் அதிகரித்திருப்பதானது வாழ்க்கைச் செலவுகளை சம்பளத்தின் ஊடாக ஈடுசெய்ய முடியாதுள்ளது. இதனால் பிறரிடம் கடன்பட்டு வாழவேண்டிய நிலை ஏற்படுகின்றது என்பதாகும்.


இத்தகைய சூழ்நிலையில் முஅத்தினுக்குரிய சம்பளம் குறைவாக உள்ளபோதிலும் வேறு தொழில் கிடைத்தாலும் அதனை பெற முயற்சிக்க மாட்டோம் எனும் நிலைப்பாட்டை 83.33% வீதமானவர்கள் பெற்றுள்ளமை இறை திருப்திக்காக வேலை செய்யும் மனப்பாங்கை எடுத்துக் காட்டுகின்றது. 16.66% வீதமானோர் வேறு ஏதாவது அரச தொழில் கிடைத்தால்

அத்தொழிலுக்கே செல்வோம் என்று குறிப்பிடுகின்றார்கள். காரணம் வினவிய போது அரச தொழிலின் ஊடாக பல சலுகைகளைப் பெற்று நிம்மதியாக வாழ முடியும் என தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்தனர்.

மேலும் மஸ்ஜிதுகளில் உள்ள பணிகளை நிறைவேற்றுவதை சிரமமாக கருதாதவர்கள் சுமார் 96.67% வீதமானவர்கள் காணப்படுகிறார்கள். 3.33% வீதமானோர் பொறுப்புக்கள் அதிகம் என்று கருதுவதையும் அவதானிக்க முடிந்தது.

மஸ்ஜிதுகளில் கடமைக்குச் செல்லாமல் வியாபாரம் செய்திருக்கலாமே என்று வினா எழுப்பிய போது 100% வீதமானோரின் கருத்தானது சம்பளம் குறைவு என்றாலும் மஸ்ஜிதுகளில் பணியாற்றுவதனூடாகக் கிடைக்கும் மன நிம்மதியும், திருப்தியும் வியாபாரத்தின் மூலம் கிடைக்கும் இலாபத்தின் மூலம் பெற முடியாது என்கின்றனர். இதனால் வேறு வழியின்றி இத்தொழிலை இறை திருப்திக்காக செய்து வருகின்றோம் எனும் மனோநிலை 100% வீதமானோர்களிடம் காணப்படுகின்றது.

அத்தோடு 100% வீதமான முஅத்தின்களுக்கு தமது கருத்துக்களை தெரிவிக்கும் கருத்துச் சுதந்திரம் காணப்படுகின்றன. இருந்த போதிலும் சம்பள அதிகரிப்புக்காக குரல் கொடுக்கும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் நம்பிக்கையாளர்கள் சபை மௌனம் சாதிப்பதானது கருத்துச் சுதந்திரத்திற்கு சவாலாக மாறி விடுகின்றது. இவ்விடயங்களை பின்வரும் வரைபடம் விளக்குகின்றன.




வரைபடம் 09 - ஏறாவூர் மஸ்ஜிதுகளில் கடமையாற்றும் முஅத்தின்களின் தொழில் திருப்தி - 2

*முடிவுரை*

ஏறாவூரில் உள்ள மஸ்ஜிதுகளில் கடமையாற்றும் முஅத்தின்களின் குறைவான மாதாந்த சம்பளமானது தொழில் திருப்தியின்மையையும், வாழ்வாதார சிக்கல்களையும் ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக நாளாந்த வாழ்கைச் செலவை ஈடுசெய்வதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளமை, வயது வந்த பெண் பிள்ளைகளின் திருமண எல்லை பிற்போடப்படுதல் விடுமுறை இன்றி வேலை செய்யும் நிலை உருவாகியுள்ளமை போன்றன இவ்வாய்வின் கண்டறிதல்களாகும். இவை முஸ்லிம் சமூகத்தின் பர்ளு கிபாயா ஒன்றை நிறைவேற்றுவதற்குத் துணை புரியும் ஒரு குழுவினரான முஅத்தின்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு முனையும் சமூக ஆர்வலர்களுக்கும், பொது அமைப்புக்களுக்கும் துணையாக அமையவல்லது.

**பரிந்துரைகள்**

- ✓ அரச நிறுவனங்களில் வேலை செய்யும் ஊழியர்கள் பெறுகின்ற சம்பளத்திற்குச் சமமான சம்பளத்தை முஅத்தின்களின் சேவை, வினைத்திறன், அர்ப்பணிப்பு என்வற்றுக்கேற்ப வழங்குதல்
- ✓ ஜும்ஆ மஸ்ஜிதுகளில் கடமையாற்றும் முஅத்தின்களுக்கு தனியான சம்பளத் திட்டத்தையும் ஜும்ஆ மஸ்ஜித் அல்லாத மஸ்ஜிதுகளில் கடமையாற்றும் முஅத்தின்களுக்கு என தனியான சம்பளத்திட்டத்தையும் வகுத்தல்
- ✓ வட்டியற்ற கடன்களை வழங்குதல்
- ✓ மாதத்தில் குறைந்தது 3 நாட்கள் விடுமுறை வழங்க ஏற்பாடு செய்தல்
- ✓ ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்தல்
- ✓ பொது அமைப்புக்கள் வீட்டுத் திட்டங்களை இவர்களுக்கும் வழங்க முன்வருதல்

***உசாத்துணைகள்***


Summary of National Accounts 2018, Department of Census and Statistics, Central Bank of Sri Lanka.

ஏறாவூரில் உள்ள முஸ்லிம் பள்ளிவாயல்கள், (2019) ஏறாவூர் பள்ளிவாயல்கள், முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம், ஏறாவூர்.

தர்ஜமதுல் குர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்பு, (2015), பறகஹதெனிய, இலங்கை: ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யா

பதிவு செய்யப்பட்ட முஸ்லிம் பள்ளிவாயல்கள், அறபுக் கல்லூரிகள், குர்ஆன் (தஹ்ம்) பாடசாலை, மத நிறுவனங்கள், (2019), முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், 180, டி.பி. ஜாயா மாவத்ததை, கொழும்பு – 10

வினோத், எஸ். (2019.05.24) **“2019ஆம் ஆண்டு பொருளாதார வளர்ச்சி இலக்கு சாத்தியமாகுமா?”,** [Online] available: http: www.virakesari.lk/article/56672 [accessed]: 18.08.2019

மஸாஹிர், எஸ்.எம்.எம். மற்றும் இஸ்மியா பேகம், எம். எஸ். (2014), இலங்கையில் மஸ்ஜிதுகளினூடாக மக்களுக்குக் கல்வியூட்டல் - மலேசிய மஸ்ஜிதுகளை மாதிரியாகக் கொண்ட ஆய்வு, முதலாவது சர்வதேச ஆய்வு மாநாடு, இஸ்லாமியக் கற்கைகள் அறபு மொழி பீடம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

**நேர்காணல்கள்**

1. அ. அச்சி முகம்மட், (24.08.2019), ஸலாம் மஸ்ஜித், ஐயங்கேணி, ஏறாவூர்.
2. அ. மு. அப்துல் ஸலாம் (31.08.2019), அபூஸாலித் தைக்கியா மஸ்ஜித், ஏறாவூர்.
3. அ. மு. அப்துல் லதீப் (24.08.2019), பரஹா ஜும்ஆ மஸ்ஜித், ஏறாவூர்.
4. அபூசாலி, (31.08.2019), றிபாய் மஸ்ஜித், ஏறாவூர
5. அ. இல்சியான், (24.08.2019), ஜாமிஉல் ஹைராத் மஸ்ஜித், மிச்நகர், ஏறாவூர்.
6. அ. மீரா முகைதீன், (25.08.2019), ஸம்ஸம் மஸ்ஜித், ஏறாவூர்.
7. அ. முஹம்மது தம்பி (31.08.2019), மஸ்ஜிதுன் நூருஸ்ஸலாம், ஏறாவூர்.
8. அ. மு. உசனார், (31.08.2019), மிஸ்பாஹ் மஸ்ஜித், ஏறாவூர்.
9. ஆதம்பாவா அப்துல் கபூர் (25.08.2019), ஆற்றங்கரை ஜும்ஆப் பள்ளிவாயல், ஏறாவூர்.
10. ஆ. லுத்புல் கரீம் (25.08.2019), இஷாஅத் அல்இஸ்லாம், ஏறாவூர்.
11. இ. அன்ஸார், (24.08.2019), ஹுதா மஸ்ஜித், மிச்நகர், ஏறாவூர்.
12. இ. சுலைமான் லெப்பை, (24.08.2019), ஸைனப் ஜும்ஆப் பள்ளிவாயல், ஏறாவூர்.
13. எஸ். எம். ஹுஸைன் (01.09.2019), மர்கசுல் இஸ்லாமி மஸ்ஜித், ஏறாவூர்.
14. எஸ்.எம். யூனூஸ் (24.08.2019), முகைதீன் ஜும்ஆ மஸ்ஜித், ஏறாவூர்.
15. க. மு. அக்மீர், (31.08.2019), சாலிஹீன் மஸ்ஜித், ஹிதாயத் நகர், ஏறாவூர்.
16. க. மு. இப்றாஹிம், (01.09.2019), முகைதீன் ஜும்ஆப் பள்ளிவாயல், உறுகாமம்.
17. க. லெ. ம∴மூது லெப்பை (24.08.2019), சுஹதா மஸ்ஜித், ஏறாவூர்.
18. ச. உதுமா லெப்பை (25.08.2019), மீரா பெரிய ஜும்ஆப் பள்ளிவாயல், ஏறாவூர்.
19. சு.லெ. மீரா முகைதீன், (24.05.2019), காதிரியா ஜும்ஆப் பள்ளிவாயல், ஏறாவூர்.
20. ம. நூர்தீன், (01.09.2019), அப்றார் மஸ்ஜித், ஏறாவூர்.
21. ம. க. சரீப்தீன், (24.08.2019), அக்பர் ஜும்ஆப் பள்ளிவாயல், ஏறாவூர்.
22. ம. மு. இம்தியாஸ், (31.08.2019), ஷாதுலி மஸ்ஜித், ஏறாவூர்.
23. மீ. ஹாஜா அலாப்தீன், (24.08.2019), வாளியப்பா ஜும்ஆ மஸ்ஜித், ஏறாவூர்.
24. மீ.மு. இப்ராஹிம் (25.08.2019), மீராகேணி ஜும்ஆப் பள்ளிவாயல், ஏறாவூர்.
25. மீ.மு. ஜுனைட், (25.08.2019), பக்தாத் ஜும்ஆப் பள்ளிவாயல், மீராகேணி, ஏறாவூர்.
26. மு. காசிம் கச்சி முஹம்மட் (31.08.2019), ஹுஸைன் மஸ்ஜித், தாமரைக் கேணி, ஏறாவூர்.
27. மு.க. உதுமா லெப்பை, (01.09.2019), வடிச்சல் ஜும்ஆ மஸ்ஜித், வடிச்சல்.
28. மு.ப. ஸம்சுதீன், (25.08.2019), தக்வா மஸ்ஜித், ஏறாவூர்.
29. மு.பு. முஹம்மது றியாஸ், (25.08.2019), ஆயிஷா ஜும்ஆ மஸ்ஜித், ஏறாவூர்.
30. ஹ. முகம்மது சித்தீக் (31.08.2019), ஸாவியா மஸ்ஜித், ஏறாவூர்.